
www.padippakam.com

# தாயகம்

நூல் ; 9
ஆவணி/ புரட்டாதி ; 1987




வெளியீடு: தமிழர் நலன்புரி மன்றம் - டென்மார்க்

அன்பளிப்பு 5 kr

படிப்பகம்

www.padippakam.com





# மீண்டும் ஒரு மஹாத்மா..!

உண்ணாவிரதப் போராட்டங்களாலும் ஆத்மபலத்தாலுமே மஹாத்மா என்றபெயர் காந்திக்குக் கிடைத்தது. தியாகவேங்கை லெப்டினன்ட். கேர்ணல். திலீபனின் மரணச்செய்தி கிடைத்தது-ம் முழுஉலகுமே அதிர்ச்சியும், இப்படிஒரு ஆன்மபலமிக்கவரை-இழந்துவிட்டோமே என்று ஆழ்ந்தகவலையுமடைந்தது.

இருந்திருந்தால் இத்தகையஒரு மகத்தான அழுவைத்தடுக்கமுடியாமல் போய்விட்டதே என மஹாத்மாவே கண்ணீர்வடித்திருப்பார். திலீபனின் தியாகத்தின் முன்னால் முழுஉலகுமே தாழ்ந்து நிற்பதையே காண்கிறோம், ஆனால் உலகிற்கு இரண்டாவது - மஹாத்மாவை அளித்திருக்கிறோம் என்றபெருமையில் இன்று தமிழீழமக்கள் அனைவரும் தலைநிமிர்ந்தே நிற்கின்றனர்.

எம்மினம் உயர்வடைய உயிர்தந்த மஹாத்மா
திலீபனுக்கு எமது வீரவணக்கங்கள்!

படிப்பகம்

www.padippakam.com



# நாயகம்

## குரல் ; 9

## ஆவணி/புரட்டாதி ; 1987

## ஆசிரியர் பக்கம்.

இலங்கை அரசியலுக்கு என்ன நடந்தது என்று நாம் ஆராட்சி பண்ணிக்கொண்டிருக்க வேண்டிய நேரம் அல்ல இது. இரத்தம் சிந்தி நாம் வளர்த்த தமிழீழக் குழந்தையை தடயங்கள் எதுவுமில்லாது கழுத்தை முறித்துக் காட்டில் எறிந்திருக்கிறது இந்திய அரசு.

நடந்து கொண்டிருக்கும இந்த ஈழப்போராட்டத்தில் சாவைச் சந்திக்காத தமிழக் குடும்பம் எது? திரும்பின திசையெல்லாம் இரத்த ஆறுகள், இடிபாடுகள் சடலங்கள் என்று எமது மண் இத்தனை நாளும் சீரழிக்கப்பட்டது எதற்காக? சுதந்திர தமிழீழத்திற்காகவா? அல்லது தெற்காசியாவில் இந்திய உபகண்டத்தின் மேலாதிக்கத்திற்கு வக்காலத்து வாங்கவா? என்பதையும் நாம் திட்டவட்டமாக முடிவுசெய்துகொள்ள வேண்டிய காலகட்டம் இது.

இந்த நேரம் ஒரு சம்பவம் எமது ஞாபகத்திற்கு வருகிறது. ஒல்லாந்தில ஆட்சியிலிருந்து விரட்டப்பட்ட ஸ்ரெற்கோல்டர் என்ற அரசனின் செல்லுபடியாகாத கடித்ததை வாங்கிக்கொண்டு, பிரித்தானியா ஒல்லாந்தரிடமிருந்து இலங்கையைக் கைப்பற்றுவதற்காக மேற்கொண்ட இராஜதந்திர வாரோட்டங்கள் வரலாறுப் புகழ் பெற்றவை. இதுபோலவே மக்களால் தூக்கி வீசப்பட்ட கூட்டணியினருடனும், சில இயக்கங்களுடனும் இணைந்து செயற்படும் இந்திய அரசின் தற்போதைய நடவடிக்கைகளும் மேற்கண்ட வரலாற்றுச் சம்பவத்துடன் ஒத்துப்போவதாகவே உள்ளன.

கடந்தகாலங்களில் தேர்தல் வாக்குகளுக்காக: [illegible]ந்து வருடங்களில் தமிழீழம் எடுத்துத் தருகிறேனென்று

www.padippakam.com


[illegible]மிழ் மக்களுக்கு தலைப்பாகை கட்டிய அப்[illegible]பிள்ளை, அமிர்தலிங்கம் கோஷ்டியினர் ஈற்றில் அந்த மக்களையே அந்தரத்தில்விட்டு இந்தியாவிற்கு ஓடியதும், உல்லாசவாழ்க்கை வாழ்ந்ததும் பழையகதை. அவர்களைப் --பற்றி நினைக்க கடந்த காலங்களிலெல்லாம் ஈழமக்களுக்கு நேரமிருந்ததும் இல்லை. ஆனால் இப்பொழுது இந்திய அரசாங்கத்தின் துணையுடன் அமிர்தலிங்கம் கோ-ஷ்டியினர் பதவிகொள்ள முற்பட்டிருப்பதை ஈழத்தின்-ஒரு சாதாரண பிரஜை கூட எதிர்பார்த்திருக்க முடி-யாது, அன்றியும் இதை நாம் ஒரு சாதாரண விடயமாக கருதிவிட லாகாது. இதன் திரை மறைவில் ஒரு சதித்திட்டமே மறைந்து கிடப்பதாகத்தான் எண்ணத்தோன்றுகிறது. மேலும் முன்னாள் கூட்டணி(பா.உ) வெ.யோகேஸ்வரன் யாழ்.வந்தபோதே இந்த வரவுக்கு ஒரு பல-மான பின்னணி இருக்கிறது! என்று விடுதலைப்புலிகளால் ஏற்கெனவே எச்சரிக்கப் பட்டிருந்ததையும் இங்குநாம் மனங்கொள்ள வேண்டும்.

கடந்த காலங்களில் போராட்டத்திற்குப் பொருந்தாத விளக்கங்களைக் கூறி பொழுது போக்கிவந்த சில இயக்கங்கள் வேறு இப்பொழுது தமிழீழ விடுதலைப்புலிகளை வேட்டையாடத் தொடங்கியிருக்கின்றன.

.வளர்ந்துவிட்ட தமிழீழப் போ-ராட்டத்தை முறித்து, பழையபடியும் செக்குமாட்டுவாழ்க்கைக்கு தமிழினத்தை தள்ள இந்திய அரசு மேற்கொண்டுள்ள சதி முயற்சிகளுக்கு இவர்கள் துணைபோவதாகவே எண்ணததோன்றுகிறது.

பஞ்சாபபில பிந்திரன்வாலேயை வளர்த்துவிட்டது இந்திரா அரசுதான் என்பதையும், அதே அரசுதான்பின் பஞ்சாப் பொற்கோயில் மீது இராணுவக் கவச வாகனங்களை ஓடி, பிந்திரன் வாலேயையும் அழித்தது என்பதை நாம் மறந்துவிடமுடியாது. இந்திய அரசின்கோரப்பற்களுக்குள் சிக்கு அழியும் ஒரு அவல நிலையை -நோக்கியே இந்த நாசகார சக்திகளான மாற்றுஇயக்கங்கள் போய்ககொண்டிருககின்றன என்பதை காலம் விரைவில் இவர்களுக்கு உணர்த்திவிடும். அதேவேளை- தமிழீழமே புலிகளின் தாரக மந்திரம்' இந்த இடைக்கால சோதனைகளையும் தந்திர வலைகளையும் அதே தந்திரத்தால் விரைவில் விடுதலைப்புலிகள் வெற்றிகொள்வார்கள் என்பதையும் நாம் தயக்கமின்றியே கூறிக்-கொள்கிறோம்.

தாயகம் ஆசிரியர் குழு.

www.padippakam.com





## ஆய்வுக் கட்டுரை :

# ஜே. ஆர், ராஜீவ் ஒப்பந்தத்தின் பின்னணி என்ன..?



### கே. எஸ். துரை

இலங்கையின் அரசியல் வானி-ல் கடந்த மாதம் ஏற்பட்ட திடீர் திருப்பங்கள் அரசியல் ஆய்வாளர்களால் முன்னரே கட்டியம் கூறப்பட்ட ந-டவடிக்கை போல தெரியவில்லை. ராஜீவ்காந்தி - ஜெயவர்தன உடன்படிக்கையும் அதன் பின் நடைபெற்ற- இநதியப்படை ஊடுருவல்கள்- யாவுமே முன்னெதிர்வற்ற திடீர் நடவடிக்கைகளாகவே- அமைந்திருநதன. இந்தியஅரசு இப்படிப்பட்ட ஒரு முடி-வையே மனதில் வைத்துச்செயற்படுகிறது, செயற்படும் - என்பதை தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் பிரிவுபகிரங்கப்படுத்தி, மக்கள் முன்- இந்திய மத்திய அரசன் உள்ளார்ந்த நோக்கங்களை எடுத்துச் சொல்லி பல வருடங்களாகிவிட்டது.

எனவே இந்திய அரசின்- இந்த முடிவானது உண்மையில் எதிர்பார்க்கப்படாத ஒன்றல்ல எனினும்; எதிர்பார்க்கப்படாத ஒரு நேரத்தில் திடீரென நடைபெற்றிருக்கிறது- என்பதே இங்கு குறிப்பிடத்தக்கதாகும். ஜெயவர்தன-ராஜீவ் காந்தியின் இத்தகைய முடிவுகளுக்கான பின்னணியை- இக்கட்டுரை ஆய்வு செய்ய-முற்படுகிறது.

இந்து சமுத்திரத்தில் இலங்கைத்தீவின் புவியியல் அமை-வு, தெற்காசியாவில் இடம் பெறும் ஏழு நாடுகளிலும் - இந்திய துணைக்கண்டம் பெறும் அதீத பலம் இவைகள் இலங்கையின் அரசியல் சமூகவியல் காரணிகளில் பெருமளவு தாக்கத்தினை வரலாற்றுக்- காலத்திலிருந்தே ஏற்படுத்து

www.padippakam.com



வந்துள்ளன. இலங்கை வரலாற்றின் ஆரம்பகாலத்திலிருந்து போத்துக்கேயர் இலங்கையைக் கைப்பற்றும்வரை இலங்கைமீது இந்தியப்படையெடுப்புக்கள் பல தடவைகள் நடந்தேறியுள்ளன. கி.பி 993 ல் சோளர்கள் இலங்கையைக் கைப்பற்றி கி.பி 1070 வரை சுமார் 77, ஆண்டுகள் மேலாதிக்கம் செலுத்தியது. இலங்கைமீது இந்தியப்படைகள் தங்கியருந்த அதிகூடிய கால எல்லை இதுவே.

ஈரதிருஷ்டவசமாக இலங்கையின் வடமேற்கு தவர்ந் ஏனைய பகுதிகளில் அண்மித்ததாக எந்த நாடும் அமைவு பெறவில்லை. இதனால் இலங்கைமீது இந்தியாவினது தாக்கம் எப்பொழுதும் பலம் பொருந்தியதாகவே இருந்து வந்திருக்கிறது. வாசனைத்திரவியங்களைப்பெறுவதற்காக ஐரோப்பிய நாட்டவர்கள் முதலில் இந்தியாவைத்தேடியே புறப்பட்டனர், இவர்கள் இந்தியாவில் நிலைகொண்டபின்னரே இலங்கைமீது தமது கவனத்தைச் செலுத்தினர்.

ஆகவே இலங்கையின் கடந்த கால அரசியல் வரலாறுகள் ஐரோப்பியரது இலங்கைவருகை உட்பட அனைத்தும் இந்திய உபகண்டததின் தாக்கத்தாலேயே பெருமளவு நெறிப்படுத்தப்பட்டிருக்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது.

மேற்கண்ட குறுகலான வரலாற்றுக் காரணிகளைப்பின்னணியாக வைத்து ஸ்ரீலங்கா அதிபர் ஜெயவர்தனா இந்திய அரசு தொடர்பாக வகுத்துக்கொண்ட திட்டங்களை சீர்தூக்கினால் அவருடைய கடந்தகால நடவடிக்கைகளில்சில வெளிப்படையான உண்மைகளை நாம் காண முடியும்.

ஜெயவர்தனா தலைமையிலான ஐ.தே.க அரசு தேர்தலில் வெற்றியீட்டு முன்னரே அப்போதய இந்தியப்பிரதமர் இந்திராகாந்தியுடன் நட்பை வளர்க்கும் நோக்கமுடையதாக செயற்படவில்லை. பல தேர்தல் மேடைகளில் இந்திரா காந்தியையும் அவர் மகன் காலம் சென்ற சஞ்சய் காந்தியையும் பசுவும் கன்றும் என வர்ணித்து ஜெயவர்தனாவின் சகாக்கள் தேர்தல் மேடைகளில்கேலிபேச வந்ததது நாடறிந்த விடயம்.

சேகுவேரா கலவரங்களை அடக்க இந்தியப்படைகள் இறக்கப்பட்டதை கண்டித்தவர்களில் ஜெயவர்தனாவும் ஒருவராவார். எற்கனவே இந்திய இராணுவத்தின நடவடிக்கைகளைக் கண்டித்துஇவர் பாராளுமன்றத்தில் பல உரைகளை நிகழ்த்தியிருக்கிறார். இவர் ஆட்சிக்கு வந்த காலத்திலிருந்தே இந்திய அரசின்மேலாதிக்கத்திலிருந்து இலங்கை-

படிப்பகம்

www.padippakam.com



யை விடுவித்து விட வேண்டும்; என்ற எண்ணத்துடனேயே செயற்பட்டும் வந்துள்ளார். அமெரிக்கா ஜப்பான, சீனா போன்ற நாடுகளுடன் தேடிச் சென்று ஏற்படுத்திக் கொண்ட சினேகித பூர்வத் தொடர்புகள் அவருடைய இந்திய எதிர்ப்பு உணர்வுகளுக்கு நல்ல எடுத்துக் காட்டாகும்.

இந்தநிலையில் தமிழீழ விடுதலைப் போராட்டமானது, 1983 யூலைக் கலவரங்களின் பின் யாருமே எதிர்பார்க்காத வகையில் மிக வேகமாக வளர்ச்சி பெறத் தொடங்கியது. இந்த விடுதலைப் போராட்டமானது இவ்விதம் திடீர் வேகம் பெற்றது வரவேற்கப்பட வேண்டிய ஒரு விடயமாயினும், இதில் பல விரும்பத்தகாத விளைவுகளும் இடம் பெற்றுவிட்டதை நாம் ஏற்கத்தான் வேண்டும். 83 யூலை கலவரங்களை ஜெயவர்தனா அது அடக்குவது போல பாசாங்கு செய்து கொண்டே திட்டமிட்ட தமது அராஜகங்களை கட்டவிழ்த்துவிட்டது, இந்த நேரம் இந்தியப்படைகளை இலங்கைக்கு அனுப்பிக் கலவரங்களை அடக்கலாம் என்ற ஒரு உள் நோக்கத்துடன் மறைந்த இந்தியப்பிரதமர் இந்திராகாந்தி "எவ்வகையான உதவி வேண்டும்" என இலங்கை அரசை கேட்டிருந்தார். இதற்குப் பதிலளித்த ஜெயவர்தனா, "கலவரங்களை அடக்க எமது படையினரிடம் வலுவண்டு நீங்கள் தமிழ் அகதிகளை-- கொழும்பிலிருந்து வடக்குகிழக்கிற்கு அனுப்பிவைப்பதற்கு, சில பிரயாணிகள் கப்பல்களை மட்டும் தந்துதவினால் அதுவே போதும்!" என்று குறிப்பிட்டார். இது ஒரு சாதாரண உரையாடல் ஆயினும் இந்திய மேலாதிக்கத்தின் நிழல் இலங்கை மீது விழுவதை ஜே.ஆர் அடியோடு ஏற்றிருக்கவில்லை என்பதனையே இது காட்டுகிறது.

இந்தநிலையில் இந்தியாவைப் பொறுத்தமட்டில் தமிழீழ சுதந்திர நாடொன்று இந்திய உதவியுடன் அமைவுபெறுமானால் நிட்சயமாக அது தென் இலங்கையில் இந்திய எதிர்ப்புச் சக்திகள் தங்குதடையின்றிக் காலூன்ற வழியமைத்துக்கொடுப்பதாகவே அமையும் என்பதை இந்தியா தெளிவாகவே கணக்குப்போட்டு வைத்திருந்தது. எனினும் இலங்கை அரசைத் தனது காலடியில் வாழவைப்பதற்காக வேறுவழியின்றி விடுதலை இயக்கங்களுக்கு மறைமுகமாக இந்தியா உதவிபுரியவும் ஆரம்பித்தது. இதில் உள்ள உண்மை என்னவென்றால் தமிழீழம் ஒன்று உருவாகும் அளவிற்கு இயக்கங்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற ஆத்மார்த்தமான நோக்கமானது இந்திய அரசு இயக்கங்களுக்குப் புரிந்த உதவிகளில் இருக்கவில்லை. இலங்கைத் தீவின்மீது தனது ஆதிக்கத்தை நிறைவேற்றும் எண்ணம் கைகூடும் அளவிலேயே இய

www.padippakam.com



க்கங்களுக்கு உதவவேண்டும் அந்தமட்டத்திற்குமேல் அவை வளரவே கூடாது என்பதில் இந்தியா எப்பொழுதும்கண்ணும் கருத்துமாகவுமேஇருந்து வந்தது.

ஒருமித்த குரலல் இயக்க வேறுபாடின்றி தமிழீழ விடுதலைப்போராட்டமானது வளர்த்தெடுக்கப்படுமானால் அது தனது அந்தரங்க எண்ணங்களுக்கு முட்டுக்கட்டையாகவே அமையும் என்பதைப் புரிந்து கொண்ட இந்தியா இதன்காரணமாகவே ஒழுங்கற்றமுறையில் கன்னாபின்னாவென்று பல இயக்கங்களை வளர்த்தெடுக்கவும் முற்பட்டது. தமது இயக்கத்திற்குள் ஒருவரைச்சேர்ப்பதானால் அவரைப்பற்றிபல மாதங்கள் இரகசியமாகத்தகவல்களைச் சேர்த்து, அவரிடம் பூரணமான நம்பிக்கைஏற்பட்டபின்னும் கூட அவரைப் பகுதி நேரத்தொண்டராக்கி அதன்பின்னரே முழு நேரத்தொண்டராக்குவது விடுதலைப்புலிகளின் வழமை. உறுதியான விடுதலைப்போராட்டமொன்றிற்கு இது மிக மிக, அத்தியாவசியமானதொன்றாகும். இவ்விதம் விடுதலைப்புலிகள் தமிழின விடிவற்காக உறுதியான நடவடிக்கைகளை எடுத்து வந்த நேரம், மற்றயஇயக்கங்களில் எந்தவிதவிசாரணைகளோ சரியானவேலைத்திட்டங்களோ இன்றிமுழு நேர ஊழியர்களாக ஏராளமானவர்கள் சேர்க்கப்பட்டுக்கொண்டிருந்தனர். இதனால்



www.padippakam.com



விடுதலைப்புலிகளைவிட திடீ-ரென அங்கத்தவர் எண்ணிக்-கையில் இந்த இயக்கங்கள் உப்பலாக வளர்ச்சிபெற்றுக் காணப்பட்டன.

இந்திய அரசின் தவறான-உள்நோக்கத்தோடு தரப்பட்ட ஆதரவு காரணமாக - பெருந்தொகையான அங்கத்தவர்களை வைத்துக்கொண்டு தமிழீழ விடுதலைக்கு தாமே தலைமைக்கர்த்தாக்கள் என்று முடிவெடுத்துக்கொண்டு இந்த இயக்கங்கள் தமது மனம் போன போக்கில் செயற்பட முற்பட்டன. உண்மையில்-சரியாக போராட்டமயப்படுத்தப்படாத இந்த இயக்கங்களும், அவற்றின் ஒழுங்கு,-ஒழுக்கமற்ற அங்கத்தவர்களும் தமிழீழ வளர்ச்சிப்பாதையை தக்கவைத்தது மட்டுமன்றி இந்திய அரசின் உள்ளார்ந்த நோக்கங்களுக்கும் ஒரு வகையில தீனி போடுவபர்களாகவுமே காலங்கடத்தினர்.

இந்த நிலையில் மேற்படி இயக்கங்கள் தமிழீழம் ஒன்-றை அமைக்கமுடியாத வகையில் இவற்றிற்குள் பிரிவினை-களை உண்டு பண்ணி எல்லாவற்றையும் தமக்குச் சாதக-மான ஒருவித குழப்ப நிலையிலேயே வைத்திருக்க இந்தியன் "ரோ" உழவுப்படை மிக ஆழமாகவே தொழிற்பட்டும் வந்தது. இந்தியாவின் இந்த உபாயங்களை முன்னேற்பா-டாகவே அறிந்துகொண்ட - புலிகள் ஈ.என்.எல்.எப் - என்ற அமைப்பில் தானும்கூட்டுச்சேர்ந்து கொண்டது. அன்றய நிலையில் இந்திய நோக்கங்களுக்கு ஆப்பு வைக்கும் ஒரு நடவடிக்கையாகவே இது இருந்ததென்று சொல்லவேண்டும். தமிழீழ விடுதலைப் - போராட்டத்திற்கு ஏற்பட்டிருந்த பாரிய அழிவைத்தடுக்க புலிகள் வகுத்துக்கொண்ட இராஜ தந்திரம் உண்மையி-லேயே வரவேற்கப்படவேண்டியதே. இருப்பினும் விடுதலைப்புலிகள் யதார்த்தமாகவே சுதந்திர தமிழீழத்தை நோக்கி உறுதியாக முன்னேறிக்-கொண்டிருப்பதால் விடுதலைப்புலிகளுக்கெதிராக ஈ.என்.எல்.எப் பிற்குள்ளேயே இரகசியமான முறையில் சிலஇயக்கங்கள் தயார்ப்படுத்தப்-பட்டுவந்தமையையும் கடந்தகால நிகழ்வுகள் பலஜயத்திற்கிடமின்றி வெளிக்காட்டியுள்ளன.

இந்தியாவின் அதிகாரப்பின்னணியில் மேற்கண்ட நடவடிக்கைகள் யாவும் நடந்து - கொண்டிருக்க, ஜெயவர்தனவும் அமெரிக்க சார்பு நாசகார சக்திகளையும் இந்திய எதிர்ப்பு நாடுகளையும் தென்இலங்கைக்குள் தங்குதடையின்றி ஊடுருவ அனுமதித்தார். இந்தியா இலங்கை என்றநி-லையிலிருந்த இந்த அரசியல் சதுரங்கப்பலகையில் தற் - போது பல சர்வதேச சக்திகளும் அமர்ந்து ஆடத்தொ

www.padippakam.com



டங்கின. இதன்பின்னரே அதிகார ஆசைபிடித்த அன்னியசக்திகளின் ஆடுகளமாக இலங்கை மாறியது.

இந்தநிகழவுகளை ஒருபுறம வைத்து விடுதலைப்புலிகளின் நடவடிக்கைகளைச்சற்றுசீர் தூக்குவோமானால் தமிழீழ விடுதலையை என்றுவது வென்றெடுக்கக்கூடியவல்லமை இவர்களைத்தவிர வேறுயாருக்கும கிடையாது என்ற உண்மையை முதலில் அனைவரும் ஒப்புக்கொண்டேயாகவேண்டும். இந்தியஅரசின் மேலாதிக்கஆசை, சிங்கள அரசின் பெருந்தொகையான இராணுவததளவாடங்கள, தமிழீழ விடுதலைக்குப பாதகமான அமைப்புககள் ஆகிய மூன்றிற்கும் எதிராகத் தொழிற்பட்டு தமிழீழ விடுதலையைவென்றெடுக்கவேண்டிய ஒரு பாரியபணி அவர்களுக்குமுன் வைக்ப்பட்டிருந்தது.

இந்தியஅரசு தமிழீழ விடுதலைப்புலிகளையும் இலங்கையின் வடக்கு கிழக்கில் ஒரு தமிழீழ அரசு அமைவதைஆதரிகக வேணடுமானால் இந்திய மத்திய அரசின் மனதில் ஒரு மாற்றத்தை தமிழக மக்கள் ஏற்படுத்த வேண்டும் என்பதில் புலிகள் நம்பிக்கை வைத்து பிரச்சாரங்களை மேற்கொண்டு வந்தனர் ஆனால்தமக மக்களின் மனதில் இருந்த ஆதரவு உணர்ச்சியை மழுங்கடிக்க செய்வதுபோல சிலஇயக்கங்கள் இநதியமக்களை கொலைசெய்யவும் கொள்ளையடிக்கவும் முற்பட்டனஇவற்றுக்கெல்லாம் சிகரம் வைத்தாற்போல திருச்சியில் நடைபெற்ற புகையிரதக்குண்டுவெடிப்பு தமிழகமக்கள் காட்டிய ஆதரவிற்கு ஒரு சோதனை தரும் நிகழ்ச்சியாகவே அமைந்தது. எனவேஇந்திய மத்திய அரசின் நோக்கங்களுக்கு மாறாக தமிழகமக்களை சிந்திக்கவிடாது சிலசக்திகள் நாசூக்காகவேசெயற்பட்டன.

இதேவேளை ஈழத்தில்கூட சில இயக்கங்கள் கொள்ளை, கொலை, ஆள்கடததல போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு சிங்கள அரசின் அட்டூழியங்களால் நொந்துபோயிருக்கும் மக்களை மேலும் மனமுறிவடையச் செய்யத்தொடங்கின. இதன்காரணமாகசில இயக்கங்களைத் தடைசெய்தும், வேறு சிலவற்றை நிராயுதபாணியாக்கியும், செயற்படவேண்டிய ஒரு தேவை விடுதலைப்புலிகளுக்கு உருவாகியது. உண்மையான தமிழீழ விடுதலையை மையமாகக் கொண்டு நோக்குவோமானால் விடுதலைப்புலிகளின் இந்த நடவடிக்கைகளில் நாமஎந்தவிதத்தவறறையும் காண முடியாது.

வடமராட்சியில் சிங்களப்படைகளின் ஒப்பரேசன் லிபரேசன் முடிந்தகையோடுஇந்தியாவின் அத்துமீறிய உணவுப்பொருள் விநியோகம் இலங்

www.padippakam.com



கை அரசு வட்டாரங்களில்- பெரும் குழப்பத்தை உண்டு- பண்ணியது. தனது ஆத்மார்த் நண்பர்களையெல்லாம் தேடி ஜெயவர்தனாவின் தூதுவர்கள பல நாடுகளுக்கும் ஏவப்பட்டார்கள், வானளவு இந்தியாவின் நடவடிக்கையானது பிழையானது என உலகில் எந்தஒரு நாடும் கண்டனம் தெரிவிக்கவில்லை. தெற்காசிய- நாடுகளின் மகாநாட்டில்கூட இந்தியாவிற்கெதிராக இலங்கைக்கு கைகொடுக்க எந்த ஒரு நாடும் முன்வரவில்- லை. இந்தக்கட்டத்தில்தான் இலங்கைஅரசு தனது அரசியல் அனாதை நிலையை திட்டவட்டமாகப் புரிந்துகொண்டது இந்தியாவைப் பகைத்துக் - கொண்டு இலங்கைக்கு உதவி புரிய உலகில் எந்த நாடும் முன்வரமாட்டாது என்ற உண்மைநிலை ஜெயவர்தனாவிற்கு- வெளிச்சமாகியது.

இது இவ்விதமிருக்க வட- மராட்சியைத் தமது கட்டுப்பாட்டுக்குள் மீண்டும் கொண்டுவரும் நோக்குடன் விடுத- லைப்புலிகள் வேகமாகத் - தொழிற்பட்டதால் வடமராட்சியில் சிங்கள அரசு நடாத்த எண்ணிய சிவில் நிர்வாகம்தவிடுபொடியாகியது. ஐரோப்பிய நிதிவழங்கும் நாடுகள்- பிரசசனைகளை மேலும் நீடித்தால் உதவிகளில் தாம்கை வைக்கவேண்டும் என அபாய அறிவிப்புக்களை வேறு விடுத்தன. நோர்வே அரசு இலங்கைக்கான உதவியை நிறுத்தியது, தென்பகுதியில் மீண்டும் சிங்களத்தீவிரவாதிகள் தொழிற்படத்தொடங்கியது, யாவும் ஜெயவர்தனாவிற்கு பெரும் தலையிடிதரும் விடயங்களாக உருவெடுத்தன. நிலமைகள்- இந்த வேகத்தில் போனால்- தமிழீழம் ஒன்று அமைவதைத் தடுக்கமுடியாது என்பதை சிங்கள ஆட்சியாளர் திட்டவட்டமாகவே அறிந்துகொண்டனர் எனவே,

1. தமிழீழ தனியரசு உருவாவதைத் தடைசெய்தல்.
2. தென்பகுதி சிங்களப- பயங்கரவாதிகளை அடக்குதல்.
3. தமக்காக குரல்கொடுக்க முன்வராத உலக நாடுகள் இலங்கை மீது கொண்ட அசிரத்தைக்கு ஒரு ஆப்புவைப்பதற்கும்,

ஒரே வழி இந்திய அரசின்- கால்களில் விழுவதே என்ற- முடிவிற்கு வந்தார் ஜெயவர்தனா. இதனால்தான் ராஜீவ் காந்தியுடன் ஒப்பந்தம்செய்து இந்தியப்படைகளையும்இலங்கைக்குள் ஊடுருவ அனுமதித்- தார்.

ராஜீவ் காந்தியைப் - பொறுத்தவரை இநத ஒப்பந்தம் வெற்றிகரமானதாக- அமைந்திருக்கின்ற போதிலும் ஜெயவர்தனாவின் இந்த முடிவு எந்த ஒரு சிங்களப்பிர- ஜையாலும் இலகுவில் ஜீர-

www.padippakam.com



ளிக்கக் கூடிய விஷயமாக இருக்கும எனக் கூறிவிடமுடியாது. மேலும் தமிழீழஇலட்சியத்தில் நின்று செயற்பட்ட மக்களுக்கு இந்தஇடைக்காலத்தீர்வு ஒரு அமைதியான சூழலை தற்காலிகமாகத் தந்தாலும் இத்தனை இழப்புக்களுக்குப் பின்னர் நாம் என்ன உரிமையை புதிதாகப் பெற்றுக்கொண்டோம்? என்று சிந்தித்துப்பார்த்தால் ஒருபெரிய கேள்விக்குறியே கண்முன்தோன்றுவது இயல்பு.

இந்திய ஆதிக்கத்தைஇலங்கையில் நிலைநாட்டவா நாம் இத்தனை இரத்தம் சிந்தினோம்? இந்தியாவில் சொகுசு வாழ்க்கை நடாத்திய குள்ளநரிகளும், கொள்ளைக்காரரும் மறுபடியும் ஈழம் வந்து கும்மாளமடிக்கவா 600 க்கும் மேற்பட்ட விடுதலைப்புலிகளையும் பல ஆயிரக்கணக்கானபொதுமக்களையும் நாம் இழந்தோம்? என்று எமது மக்கள் கேட்காமலிருப்பார்களா?

ஈழமண்ணில் காலம்மிக விரைவாகவே தொழிற்பட்டுக்கொண்டிருக்கிறது இதன் தாக்கங்களை நாம் விரைவில் சந்திக்கலாம்.

# அங்கே பறக்குது புலிக்கொடி.!

— தாஸ் —

ஈழ மண்ணின்–
கீற்று வேலிகளே!
அந்த–
புரட்சி மண்ணில்
பூத்த–
பூவரசம் பூக்களே!
நீங்கள்
நிமிர்ந்து பார்க்கும்
அந்த–
புரட்சி வானை
அது என்ன–
செந்நிறமாய்
மூடியிருக்கிறதே!
என்று
பார்க்கிறீர்களா?
அவைதான்–
ஈழத் தமிழனின்
உயர்ந்த
சுதந்திர தாகத்தை
இந்த
உலகிற்கு சொல்லும்
எங்கள்
செந்நிறப்
புலிக்கொடிகள்.

www.padippakam.com



அட்டைப்படக் கவிதை;

# புதியதோர் படையெடுப்பு தமிழீழத்தில்...

— எஸ்.கே. அன்ரனி

எய் இந்தியாவே..!
புலிகள் தலைமையில்—
புதி யுகம் கண்டுகொண்டிருக்கும் வேளையில்,
புதியதொரு ஊடுருவல் ?
தமிழன் எப்பாடு பட்டாலும் நமக்கென்ன ?
நமது காரியம் வெற்றிபெற்றது என
நீ தற்பெருமை கொண்டாடுகின்றாயா ?

எய் இந்தியாவே..!
அன்று பிரித்தானியர் ஏகாதிபத்தியத்தின் கீழ்
அடிமைப்பட்டு இருந்தவேளை
சுதந்திரம் வேண்டிப் போராடிய இந்தியாவா ?
இன்று தமிழ் ஈழத்திற்காக போராடி
வெற்றிபல படைத்த விடுதலைப்புலிகளையும்

தமிழ் மக்களையும் உனது
தான் தோன்றித்தனத்தால்
நசுக்க முற்பட்டுள்ளாய் ?

ஏய் இந்தியாவே
கனரக ஆயுதங்களையும், பீரங்கிகளையும்
பல ரகவிமானங்களையும்
பல்லாயிரக்கணக்கான கூலிகளையும்
நிரையில் நிறுத்திக்கொண்டு
தமிழ் எல்லைகளையும்
புலிகளின் தியாகங்களையும்
உடைத்துக்கொண்டு அவர்களின்
சமாதியின் மேல்
பவனிவரத் தொடங்கிவிட்டாயா ?
யார் தந்தது இந்த உரிமைஉனக்கு ?
புலிகளின் மௌனம்-
சம்மதம் என நினைத்துவிட்டாயா ?

ஏய் இந்தியாவே..!
புகுந்துவிட்டேன நான் இனி
புலிகள் ஒதுங்கிவிடுவார்கள் என
கனவுகாண்கிறாயா ?

ஏய் இந்தியாவே..!
ஆயுதங்களை ஒப்படைத்துவிட்டார்கள்-
போலிக் கும்பல்கள் எனக்குத்துணைநிற்கிறது-
புலிகளை அழித்துவிடலாம் எனக்
கனவு காண்கிறாயா ?
அப்படி ஒரு கனவுண்டென்றால்-
அதை மறந்துவிடு.

ஏய் இந்தியாவே..!
மீண்டும் தமிழனை
அடிமையாக்க துணைபோகும் எட்டப்பர்கள்,
உனது பலரக ஆயுதங்களைக் கண்டு-
வீறுகொண்டெழுந்து-
விடுதலைப்புலிகளை ஒறுக்கிவிடுவார்களென
கனவு காண்கிறாயா ?
அப்படி ஒரு கனவுண்டென்றால்-
அதை மறந்துவிடு.
விடுதலைக்காகப் புறப்பட்ட புலிகள்
புதியதொரு அடக்குமுறை எவ்வடிவில் வந்தாலும்
அதை எதிர்கொள்ளத் தயங்கிடார்

ம. பக்→



www.padippakam.com




ஏய் இந்தியாவே..!
புதியதொரு நாட்டைப் படைக்கும்வரை-
புதைகுழியிருந்து மீண்டும் மீண்டும்,
புத்துயிர் பெற்று-
புறப்படுவோருடன் உன்னையும் போலியான
கும்பல்களையும்-
புறமுதுகு காணவைக்கும் நாட்கள்
வெகு தூரமில்லை.

# ஈழத் தமிழினத்தின் ஏகோபித்த தலைவர். வே பிரபாகரன்

சுதுமலையில் மக்கள் முன் உரையாற்றுகிறார்






**31-8-86 ஈழமுரசு ஞாயிறு இதழில் வெளியான கட்டுரை.**

தற்போதைய சிங்கள அரசின் ஜனாதிபதியான ஜூனியஸ் ரிச்சட் ஜெயவர்தனவின் முதாதையர்களின் வரலாறு இம்முறை வரலாற்றுச்சுவடிகளில் தரப்படுகிறது.

சிலாபத்தில் முதலியாராக இருந்த டொன்-எப்பிரகாம் ஜயவர்தன என்பவர் தற்போதய ஸ்ரீலங்கா ஜனாதிபதி ஜே.ஆரின் பூட்டனாராவார். இந்த டொன் எப்ரஹாம் ஜயவர்தனவின் தகப்பனே இக்கட்டுரையில் பேசப்படும் தமிழ்நாட்டிலிருந்து இலங்கைக்கு வந்து குடியேறிய தம்பிமுதலியாராகும்.

# ஜெயவர்தனவின் மூதாதையர்...

# தம்பி முதலியார் பரம்பரை!

1830 மே 15-ம் தேதி வெளியிடப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானியின் அனுபந்தத்தில் தம்பி முதலியாரின் ஆரம்ப வரலாறு சுருக்கமாக கூறப்பட்டுள்ளது. "ஒரு தலைமைக்காரனின் வாழ்க்கை வரலாறு" என்ற தலைப்பில் அது பிரசுரிக்கப்பட்டுள்ளது. பிரிட்டிஷாருக்குத் தம்பி முதலியார் ஆற்றிய சேவை பற்றி பெருமிதம் கொண்ட ஒருவராலேயே அது எழுதப்பட்டுள்ளது என்பது தெரிகிறது.

வர்த்தமானியில் தம்பி முதலியாரின் வரலாறு பிரசுரமாகிய அக்காலத்தில் தம்பி முதலியாரின் தகப்பனார் ஒரு தமிழர் என்பதும் அவர் ஹென்வெல்லைக்கு (கொழும்பு அவிசாவெல்லை பாதையில் களனி ஆற்றுக்கு அருகாமையில் உள்ள ஒரு இடம்) அருகாமையில் இருந்த வெல்கம் என்ற இடத்தைச் சேர்ந்த ஒரு சிங்களப் பெண்ணைத் திருமணம் செய்து பெண்ணின் குடும்பத்தில் இருந்து ஜெயவர்த்தனா என்ற பெயரைப் பெற்றுக் கொண்டார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம்.

அவர் புதிய பெயருடன் புதிய இனத்தைச் சேர்ந்தவராக புதிய மதத்தை ஏற்றுக் கொண்டவராக புதிய உடைகளைத் தரித்தவராக புது மனிதரானார். வர்த்தமானியில் வெளிவந்த வாழ்க்கை வரலாறு எழுத்து வடிவத்தில் பின்வரும் விபரங்களைத் தருகின்றது. இந்த நாடு ஒல்லாந்தக் (டச்சு) காரர்களின் கைவசம் இருந்தது. ஆரம்ப காலத்தில் அவரின் (தம்பி முதலியாரின்) மூதாதையர் கொரமண்டேஸ் கரையோர பகுதியில் இருந்து வெளியேறிக் கொழும்பில் குடியேறினர் (பக்கம் 348-349). தம்பி முதலியார் கொரமண்டேஸ் கரையோரப் பகுதியைச் சேர்ந்த வர்த்தகர்களுள் செட்டி குலத்தைச் சேர்ந்தவர் என வர்த்தமானியிலும் டௌலியாலும் குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் சிறு சந்தேகம் உள்ளது.

அவர் ஆச்சாரி குலத்தை சேர்ந்தவர் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அவர் ஒரு ஆச்சாரியோ செட்டியோ எல்லாச் சமூகங்களிலுமுள்ளது போன்று சாதுக்களையும் போதகர்களையும் கொண்ட தமிழ்ப் பெருங் குடியை சேர்ந்தவர் என்பது ஏற்றுக் கொள்ளப்பட்ட தொன்று.

ஜெயவர்த்தனா பரம்பரையில் முதலாவது நபர் இருநூறு ஆண்டுகளுக்கு முன் இலங்கைக்கு வந்ததிலிருந்து இரண்டு குடும்பப் பெயர்களை உபயோகித்துள்ளனர். ஒன்று ஜெயவர்த்தனா என்பது தெரிந்ததே. மற்றப் பெயர் என்ன என்பது மறைக்கப்பட்ட புதிராகவே உள்ளது. 1930 மே 15இல் வெளியான இலங்கை வர்த்தமானியில் இது பற்றி ஏதும் குறிப்பிடப்படவில்லை. அந்த வர்த்தமானியில் இது பற்றி கூறப்பட்டுள்ளதாவது:

www.padippakam.com



'முதலியாரின் தகப்பனார் சிங்கள உடை போன்றவற்றை ஏற்றுக் கொண்டு தமது பழைய குடும்பப் பெயரை ஒதுக்கி வைத்து விட்டு ஜெயவர்த்தன என்ற பெயரை ஏற்றுக் கொண்டார். ஒதுக்கி வைக்கப்பட்ட முன்னைய பெயர்தான் என்ன? நிச்சயமாக அது ஓர் தமிழ்ப் பெயர். அது சின்னத்தம்பியாக அல்லது பெரியதம்பியாக சைமன் புள்ள அல்லது சாமிக்கண்ணு ஆச்சாரியாக இருந்திருக்கலாம். அல்லது போலி ஆசிரியர்களின் நவீன சிங்களவர்களின் வெறுப்புக்குள்ளாய் இருக்கும் செல்லப் பெயரான தொண்டமானாகவும் இருந்திருக்கலாம். சதைப்பற்றுள்ள இரகசியத்தை யாரோ ஒருவர் தனது நெஞ்சுக்குள் மறைத்திருக்கிறார் என்பதை மட்டும் நான் திடமாக நம்புகின்றேன்.

ஆண்களின் வழிவந்த முறையில் ஜூனியஸ் றிச்சட் ஜெயவர்த்தனவின் பூட்டன் எல்லோர் மத்தியிலும் தம்பி முதலியார் எனவே தெரிந்திருந்தார். தற்போது நிலவும் தவறான கணிப்பீடு யாதெனில் தம்பி முதலியார் என்பவர் ஒரு முஸ்லிம் என்பதாகும். அவரின் வாழ்க்கையையும், குண நடைகளையும் படித்த மட்டில் அவர் இஸ்லாம் மதத்தைத் தழுவியதும் கிடையாது. அல்லது அம் மதத்தில் சேருவதற்கான விதிமுறைகளைச் செய்ததாகவும் இல்லை.

சியான் கோரலையில் உள்ள கென்வெல்லைக்கு அருகாமையில் இருந்த வெல்கம் என்ற கிராமத்திலேயே தம்பி முதலியார் பிறந்தார். இலங்கை வர்த்தமானியில் பிரசுரமான அவரது வாழ்க்கை வரலாறே பேசட்டும். "மூன்று வயதில் அவர் தன் தந்தையை இழந்தார்." கதை தொடர்கிறது.

ஆனால் இதில் அந்த தனிமனிதன் குறிப்பிடப்படுகிறார். ஆனால் அவரின் தந்தையின் உண்மையான பெயர் மட்டும் வருங்கால சந்ததிக்கு இரகசியமாக்கப்பட்டுள்ளது. ஆனால் அதே நபர்தான் ஒரே நேரத்தில் தனது பெயரை, இனத்தை மதத்தை, உடையை மாற்றிய சாதனையை இலங்கையில் நிலைநாட்டிய ஒரே நபர்.

வர்த்தமானியில் சுய சரிதம் தொடர்ந்து கூறுகின்றது. "அவரின் பிரிவு (தம்பி முதலியாரின் தகப்பனாரின் மரணம்) அத்துடன் அதே நேரத்தில் அக் குடும்பத்திற்கு ஏற்பட்ட ஏனைய பெரும் துன்பங்களும் எஞ்சியிருந்தோருக்குக் கிலேசத்தை ஏற்படுத்தியது. அதன் காரணமாக ஜெயவர்த்தன தனது இளமை நாட்களிலே பல்வேறு துயரங்களை எதிர்நோக்கவும் சொந்த வீட்டுப் பிரச்சினையால் ஏற்பட்ட கஷ்டங்களையும் அனுபவித்தார். அவரும் உள்ளூர் வாசிகளைப் போன்ற இயல்புகளை மாத்திரம் பெற்றிருந்தால்தான் எதிர் நோக்கிய அனுகூலமற்ற நிலையில் உள்ளூர் வாசிகளுக்கே உரித்தான ஒதுங்கி வாழும் குணம்சத்தைப் பெற்றிருப்பார். ஆனால் ஆரம்பத்திலிருந்தே உள்ளூர் வாசிகளிடம் காணப்படாத ஓர் சக்தி மிக்க குணம்சத்தை புலப்படுத்தினார். தனக்கு ஏற்பட்டுள்ள அவலநிலையை அவர் உணர்ந்த போதிலும் அதில் இருந்து மீள முடியும் என நம்பிக்கை இருந்த பொழுதும் அதற்கான வாய்ப்பு மிக அரிதாக தெரிந்த பொழுதும் தனது சூழ்நிலையை எதிர்த்தும் போராட தேவையான மனஉறுதி அவரிடம் இருந்து எவ்வாறு எதிர் பார்க்காமல் நடைபெற்ற சம்பவங்களிலிருந்து மீளவும் உயரவும்

படிப்பகம்

www.padippakam.com



விடா முயற்சியாக உறுதுணையாக நின்றன என்பதை அவரது பிற்கால வாழ்வு எடுத்துக் காட்டுகின்றது.

தம்பி முதலியாரின் வரலாற்றை எழுதியவரைப் பொறுத்தவரையில் தம்பி முதலியாரின் குணாம்சங்களில் காணப்பட்ட சிறப்பு மிக்க அம்சங்கள் இவையே. அண்மையிலுள்ள தமது நாட்டைவிட்டு வந்து அண்மைகாலத்தில் குடியேறிய தமிழ்க் குடும்பத்தைச் சேர்ந்த ஒருவரிடத்தில் உள்ளூர் வாசிகளின் குணவியல்புகளை காண முடியாதது இயல்பானதே. ஆனால் இந்த வேறுபாடுகளை சாதகமாகப் பாவித்து இந்நாட்டு மக்களின் குணஇசயங்களை மாசுபடுத்தவும் அதே அளவுக்கு தம்பி முதலியாரைப் புகழவும் கூடிய ஒப்புநோக்குதலை வெறுக்கத் தக்க விதத்தில் சுய சரிதை எழுதியவர் மேற்கொண்டுள்ளார்.

''உள்ளூர் வாசிகள்'' என்ற வார்த்தை தேவையற்ற முறையில் வலுக்கட்டாயமாக உபயோகிக்கப்பட்டுள்ளது. தனது கதாபாத்திரமான தம்பி முதலியாரைப் புகழ முனைகின்றபோதெல்லாம் உள்ளூர் வாசிகளுக்கு இருந்த குறைபாடுகள் அவர்களுக்கு இல்லையென அவ் எழுத்தாளர் உள்ளூர் வாசிகளைக் கேவலப்படுத்த முனைந்துள்ளார். இறுதியாக தம்பி முதலியாரின் பிற் பகுதி வரலாறு வெற்றிகரமானது என எமக்கு காட்ட முனைந்துள்ளார். தம்பி முதலியாரின் பிற்கால வரலாற்றை பின்பு ஆராய்வோம்:

அவருடைய (தம்பிமுதலியார்) பதிநான்காவது அல்லது பதினைந்தாவது வயதில் கேர்ணல் டிபோர்க்கின் கவனத்துக்குள்ளானார். ஒல்லாந்தரின் (டச்சு) வசமிருந்த கொழும்புக் கோட்டையின் தளபதியாக கேர்ணல் இருந்தார். தம்பிக்கை காவிக்கக் கூடிய இயற்கையான திறமைகளைக் கொண்ட இளம் ஜெயவர்த்தனவைக் கண்ட அவர் (கேர்ணல்) வீட்டு வேலைக்காரன் என்ற நிலையில் இருந்து லஸ்கோலியான் ஆயுத அணியின் ஆராய்ச்சி (விதானை) தற்போதைய கிராம சேவகர் போன்றதான பதவி உயர்வு வழங்கினார் ஒல்லாந்துகாரரின் லஸ்கோலியன் ஆயுதஅணியின் ஆராய்ச்சிப் பதவியில் இருந்து எதிர்கால தம்பிமுதலியார் சம்பளத்திற்காக டச்சுக்காரரின் உளவாளியாக மாறினார். மேஜர் ஜெனரல் ஸ்டுவாட்டின் தலைமையில் பிரிட்டிஷ் இராணுவத்தினர் தீவை ஆக்கிரமித்து கொழும்பை நோக்கி முன்னேறிய பொழுது ஒல்லாந்து கவர்ணர் வோன் அஞ்சல் பேக் ஆங்கில இராணுவத்தினரின் பலம் போன்றவற்றையும் அவர்களது வழமையான நடமாட்டத்தையும் மாறுவேடத்தில் சென்று அறிந்து தகவல் தருவதற்குத் தகுந்த நபராக ஆராய்ச்சி ஜெயவர்த்தனவை தெரிவு செய்தார். ஒல்லாந்தர்களினால் நாட்டைவிட்டு வெளியேற்றப்பட்டிருந்த முன்னைநாள் முதலியார் ஒருவரின் சேவையை அந்தநேரத்தில் பிரிட்டிஷ்காரர் பாவித்து வந்தனர். களனி கங்கையில் உள்ள மாபோலையில் வைத்து தம்பி டச்சுக்காரரின் உளவாளி என்பதை அம்பலப்படுத்தியவர் இந்த முதலியாரே ஒல்லாந்துகாரரின் தமிழ் சிங்கள உளவாளி கண்டுபிடிக்கப்பட்டு கைதுசெய்யப்பட்டு மேஜர் ஜெனரல் ஸ்டுவாட்டின் முன்னால் கொண்டுவரப்பட்டார். எல்லா உளவாளிகளைப் போன்றே தம்பியும்

www.padippakam.com



உயர் பதவிபெறும் நோக்குடன் விளையாடினார். ஆனால் விளையாட்டில் தோற்றார். தம்பி முதலியாருக்கு மரண தண்டனை விதிப்பதைத் தவிர ஜெனரல் ஸ்டுவாட்சுக்கு மாற்று வழி இருக்கவில்லை. இங்கு விதி விளையாடியது எனச் சிலர் சொல்லுவார்கள். என்னைப் பொறுத்தவரையில் தீர வீரச் செயல்களில் ஈடுபடும் ஒருவருக்கு இருக்கவேண்டிய கஷ்டமான நிலைமைகளை சமாளிக்கும் திறமை தேவையான மட்டும் தம்பிக்கு இருந்தது அது தூக்குக் கயிற்றில் இருந்து தம்பியைக் காப்பாற்றியது.

அந்த வர்த்தமானியில் உள்ள வாழ்க்கை வரலாற்றின் படி பிரிட்டிஸ்காரர் அவரை தமக்காக மாறி உளவறியும் படியும் ஒல்லாந்துப் படையணியின் சரியான பலம், கோட்டையைப் பாதுகாக்க அவர்கள் மேற்கொள்ளும் முயற்சிகளின் தன்மையும் அளவும், அடிப்படையினரின் பொதுவான நிலையையும் சரியாக அறிந்து கூறுமாறு பணித்தனர்.

உயிர்தப்ப விடப்பட்டதனால் அவர் இறுதியில் பிரிட்டிஷ் உளவாளியாகப் பூரணமாகப் பிரகாசித்தார் என்பதைக் காண்கிறோம்.

தம்பி முதலியாரின் பிற்கால வரலாறு ஒரு இலங்கையர் எனச் சொல்லப்படுபவரால் பெருமை பாராட்டக் கூடிய தொன்றல்ல. அவர் தன்னைப் பெருமையுடன் முதலியார் டொன் அடிரியன் விஜயசிங்க ஜெயவர்த்தன என அழைத்துக் கொண்டார். ஒரு விதத்தில் தம்பி முதலியாரின் பிற்கால வரலாறு இலங்கை வரலாற்றுக்குச் சேர்ந்ததல்ல. அது பிரிட்டிஷ் வரலாற்றையே சாரும்.

1950 மே 15ல் டைம்ஸ் ஒவ் சிலோன் பத்திரிகையில் வின்சன் டி சில்வா எழுதிய கட்டுரையின் இறுதி வசனங்களை மேற்கோள் காட்ட விரும்புகின்றேன். பிரிட்டிஷ்காரருக்கு அதிலும் பார்க்க கூடிய விசுவாசமான சிங்களவர் என்றும் இருந்ததில்லை. சிங்களவர்களுக்கும் அதிலும் பார்க்க கேவலமான துரோகி இருந்ததில்லை. அனுபவமிக்க துரோகிகளான பிலிமத்தலாவையும், எகேலபொலவும் தவறான வழிகாட்டலினால் சிங்கள முடியாட்சி ஒன்றை ஏற்படுத்த முயற்சித்தார்கள். ஆனால் பேற் முதலியார் அடிரியன் ஜயவர்த்தனா வாழ்வதற்காக அவ்வாறு செய்தார்.

அட்டைப்பட ஓவியம்;
எஸ். சிவநாதன்
கொல்ஃரபோ.

www.padippakam.com



# ஒரு நாடு

# கேள்வி பதில் அல்ல

ஜே. ஆர். ஜெயவர்தன லண்டன் ரைம்ஸ, நியூஜோர்க் ரைம்ஸ் ஆகிய பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியிலிருந்து சில பகுதிகள் இங்கே தரப்படுகின்றன.

கேள்வி,
நீங்களும் ராஜீவ்காந்தியும் செய்துகொண்ட உடன்படிக்கையை பாராளுமன்றத்தில் நிறைவேற்றுவதற்கான சாத்தியக்கூறுகள் எவ்வாறுள்ளன?

பதில்,
இதில் எந்தக் கஷ்டத்தையும் நான் காணவில்லை. அது பாராளுமன்றத்தின் முன் செப்டெம்பர் கடைசியில் அல்லது அக்டோபர் ஆரம்பத்தில் கொண்டுவரப்படும். அது அங்கு நிறைவேற்றப்படும்.

கேள்வி,
வடக்கு-கிழக்கு மாகாணங்களின் இணைப்புக்கு எதிராக ஏன் நீங்கள் பிரச்சாரம்செய்ய இருக்கிறீர்கள்?

பதில்,
கிழக்கு மாகாணம் உடன்பட்டால் ஒழிய இதற்கு நான் ஆதரவாக இல்லை.

கேள்வி,
அம்பாறைத் தொகுதி கிழக்கு மாகாணத்திலிருந்து வேறுபடுத்தப்படுமா?

பதில்,
இல்லை! கிழக்கு மாகாணம் தற்போது வகுக்கப்பட்டெல்லைகளிலேயே தொடர்ந்து இருக்கும் அதையிட்டு நான் சந்தோஷப்படுகிறேன்.

கேள்வி,
விமான எதிர்ப்புக் கருவிகளை தீவிரவாதிகளுக்கு விநியோகப்போம என்று இந்

ரியா உங்களைப் பயமுறுத்த யதா?

பதில,
அவர்கள பய முறுத்தவில்லை அதைச் செய்தார்கள்.

கேள்வி,
புலிகள் தங்களுடைய முழு ஆ யுதங்களையும் கையளிப்பார் கள் என நீங்கள் எதிர்பார் க்கிறீர்களா?

பதில்,
நாம் செய்வதைப்போலஉட ன்படிக்கையில் உள்ள அவர்க ளின் பகுதியை நிறைவேற்று- வார்கள் என நினைக்கிறேன்

கேள்வி,
அவர்கள் அவ்வாறு செய்யா விட்டால் ?

பதில்,
இந்தியாவும் இலங்கையும் இணைந்து செயற்படவேண்டி யிருக்கும்.

கேள்வி,
அது எம்மாதிரியான செய ற்பாடாயிருக்கும ?

பதில்,
அதை இப்போது கூற முடி யாது. அது ஒப்பந்தத்திற் கு உண்டாகும் தடைகளில்- தங்கியுள்ளது.

கேள்வி,
அமைதி யேற்பட்டால் இந்தி யப்படைகள் எப்போது வெ ளியேறும் ?

பதில்,
அதை நான்தான் தீர்மானி க்க வேண்டும்.

கேள்வி,
இன்று இலங்கையில் ஏற்பட்டு ள்ள திருப்பத்திற்கு ஆகாய- மார்க்கமான நிவாரணஉதவி ஒரு காரணமா ?

பதில்,
இல்லை. நான் அவ்வாறு - நினைக்கவில்லை. அது ஒரு- திருப்புமுனையல்ல அசிங்கமா னமானது.

கேள்வி,
மக்கள் உங்களை சிறந்த - தோர் சாணக்கியன் என்கிற ார்களே ?

பதில்,
என புத்தா அல்லது கிறிஸ்த வன் என்று கூறவில்லை ? நா ன் அஉறிம்சைவாதி, காந்தி யவாதியும் கூட. நான்- உண்மையை நம்புவபன், என்று வது பொய் கூறினேன் என்று எனக்கு ஞாபகமில்லை.

கேள்வி,
நீங்கள் ஒரு காந்தீயவாதி- என்கிறீர்கள் ஆனால் நீங்களும வடக்கு கிழக்கு பகுதியில் - பலாத்காரத்தை பாவித்துள் ளீர்கள்தானே ?

பதில்,
அது அரசாங்கத்தை நாச- மாக்கப் புறப்பட்ட மக்களு க்கு எதிரானது.

www.padippakam.com



# கண்டனை சொல்லுறார்.



வடக்கோடை கிழக்கு இணையிறதை நான் ஏறக்மாட்டன் என்று இப்ப ஜெயவர்தன — சொல்லித்திரியிறராம் ! ?

ஓ ! அப்பாடியெண்டால் கிழக்கோடை வடக்கை இணைக்கிறதை நான் ஏற்கிறன் எண்டு கிட்டடியிலை சொல்லப்போறார் என்டுறியள் ?

சரிவிடுங்கோ ! உவர் என்னத்தைத்தான் சொல்லாமல்விட்டிருக்கிறார் ?

கேள்வி,
அகவே நீங்களும் தேவைப்படும்போது பலாத்காரத்தை பரயோகிக்க தயாராகவுள்ள காந்தியவாதியாகததா— னே இருக்கறீர்களா ?

பதில்,
ஆம் ! உண்மையில் இப்போ— நீர் என்னை அடிக்கமுற்பட்— டால் நான் உம்மது பலாத்காரம் பரயோகிப்பேன் — அதில் சந்தேகம் இல்லைகாந்தியக்கொள்கையில் அந்தப் படிக்கு தற்போது நான் — வந்துவிட்டேன்.

( ● மேறகணட அடையாள— மடபபடட கேளவி யும ▲ மேறகணட அடையாளமடபப டட பதிலும பரிசுககுரியவை யாகும. )

தாயகத்தில் உங்கள் ஆக்கங்கள் வெளிவரவேண்டுமா? காலதாமதமின்றி கீழ்ககண்ட முகவரிக்கு உடனடியாக அனுப்பிவையுங்கள்.

THAYAKAM
THAMILAR NALLANPURI MANTRAM
Postbox 304
7400 Herning
Denmark

www.padippakam.com



# மண்டலில் வாழ்வதா? சுதந்திரம்.

ஜெ. றொக்கி

தாயகமாம் செழிப்பு நிறைந்த சோலையிலே
பாடித்திரிந்த அந்த நாட்களே !
காதலும் களிப்புமாய் வாழ்ந்த பூமியிலே
விஷ விதைகளை விதைத்தனர்.
சிங்களச் சேற்றினிலே புரண்ட காடையர்
செந்தமிழ் மண்ணில் சிங்காசனமேற-
உழைப்பால் உயர்ந்த எம்பூமியில் நின்ற
உன்மத்தம் புரிந்த ஊழையிட-
வயிற்றுக் கஞ்சிக்கு வழியல்லா நாய்கள்
நம்பூமியை வளைத்து நிற்க-
வேட்டை நாய்களின் விகாரப் பற்களுக்கு
மக்கள் வெருண் டோட-
வீர கொண் டெழுந்தனர் வேங்கைகள்
வெருண்டோடின தெரு நாய்கள்.!
பொம்பரும், கொள்ளையரும் வம்பரும் தோற்றத
புலிகள் எழுதிய புதுக்கவிதை.!



படிப்பகம்

www.padippakam.com



[illegible] வளைகளை அகற்றி நாம்
சுதந்திர தமிழீழம் அமைக்கும்வேளை—
இடையில் இது என்ன ஓர் இந்தியா!?
அட கடையில் வாங்குவதா சுதந்திரம் ?
இந்தியா வாயில் போட தமிழீழம் வங்காளமுமல்ல—
புலிகளும் ஒன்றும் புரியாதவருமல்ல.
இந்தியாவே! உன்னை நான் எச்சரிக்கிறேன்!
வேண்டாமுன் விபரீத விளையாட்டு!

# பொழுதுபோகாத P.L.O.T ஆதரவாளருக்கு...

## சமாதானம் இலட்சியத்திற்காகவா?

வீரகேசரியில் வெளியான செய்திக் கட்டுரை

[illegible] சமாதானத்தை [illegible] "புலி"களை [illegible] அறிவித்தது.

இப்படி ஒரு பொய் – வவுனியா புளொட் தலைவர்கள் இருவர் ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு கொடுத்திருக்கிறார்கள்.

"இந்த இலட்சியத்திற்காக நாங்கள் [illegible] விடத் தயார்" என்று [illegible] கூறியிருக்கிறார்கள் அந்தத் தலைவர்கள்.

சமாதான இலட்சியத்திற்காகவா? அல்லது புலிகளை ஒழித்துக்கட்டுவதற்காகவா? புளொட்கள் தங்கள் உயிரைக் கொடுக்கப் போகிறார்கள் என்பது செய்தி விநோதனுக்கு விளங்கவில்லை.

செய்தி விநோதன் ஒரு சாதாரண "ஸ்கொட்ச்மன்" – புரிந்து கொள்ளும் தன்மை [illegible]. [illegible] விஷயத்தையும் புரிந்து கொள்ள வெகு நேரம் பிடிக்கும். ஆனால் ஒருகால கட்டத்தில் நாம் அடைவதையே தமது இலட்சியமாக ஒரே மூச்சாகக் கொண்டிருந்தார்கள் புளொட்கள்.

பல வருடங்களுக்கு முன் ஒரு வார பத்திரிகையில் வந்த துணுக்

[illegible]

"சமாதானம் வேண்டும்" எனச் சொல்லி மேடைப் பேச்சாளர் ஒருவர் ஓங்கி மேசையில் அறைகிறார். மேசை "படார்" என இரண்டாகப் பிளந்து விடுகிறது. என்னே

படிப்பகம்

www.padippakam.com



## இது உண்மையா? அப்படியானால் ராஜீவ்...?

இந்தியப்பிரதமர் ராஜீவ் காந்தியை கடந்தமுறை நான் சந்தித்தபோது, அவர் வடக்கையும், கிழக்கையும் ஒன்றுபடுத்தநீங்கள் ஒருபொழுதும் உடன்பட வேண்டாம் என்று என்னிடம் நேரடியாகக் கூறினர். நீங்கள் அப்படி வடக்கையும், கிழக்கையும் இணைத்து தமிழர்களுக்குக் கொடுத்தால் அது இந்தியாவுக்கே ஆபத்தாக அமையும் என்று என்னிடம் தெரிவித்ததை இப்பொழுது தெரிவிக்க வேண்டிய நிலையில் உள்ளேன்.

ஸ்ரீலங்கா பிரதமர் ரணசிங்க பிரேமதாச.



## பொழுது போகாத P.L.O.T.....

பேச்சாளரின் சமாதான அர்வம்! புளொட் பேச்சு இதை எனக்கு நினைவு படுத்துகிறது.

புளொட்டின் — சமாதான இலட்சியம் — அல்லது புலிகளை ஒழித்துக் கட்டும் — இலட்சியம். நிச்சயம் புளொட்டின் இன்றைய பொதுக் கொள்கையாகத்தான் இருக்க முடியும். அண்மையில் தொடங்கிய புளொட் — புலிகள் மோதல்கள் இதை நிரூபித்துக் காட்டுகின்றன.

அப்படியானல், புளொட்டின் நெடுங்கால இலட்சியத்தில் — ஈழம் அடையும் இலட்சியத்தில் மாற்றம் ஏற்பட்டு விட்டதா? என வினோதனுல் கேட்காமல் இருக்க முடியவில்லை. எல். ரி. ரி. ஈ. தனது இலட்சியத்தில் எவ்வித மாற்றமுமில்லை எனப் பேசிக் கொள்கிறது. தயக்கத்துடன் தான் ஆயுதம் கையளித்தார்களாகவும். இந்தியாவின் வற்புறுத்தலின் மீது தான் ஆயுதங்களைக் கையளித்தோம் என்கிறது எல்.ரி.ரி.ஈ.

அப்படிப் பார்த்தால் — இலட்சியங்களை ஒப்பிட்டுப்பார்த்தால் புலிகளின் இலட்சியம் தேவலை போல் தெரிகிறது. ஒரு தீவிரவாதக்குழு இன்னும் ஒரு தீவிரவாதக் குழுவை ஒழித்துக் கட்டுவதையே இலட்சியமாகக்கொண்டிருக்கிறது. தமிழ் மக்கள் எந்தக் குழுவை ஆதரிப்பார்கள்? அதோபார் — வினோதன் புலிகளுக்கு வால்பிடிக்கிருன் — வக்காலத்து வாங்குகிருன். புலிகள் எங்களை முன்னெருதரம் ஒழித்துக் கட்டவில்லையா? என புளொட் என் மீது பாயலாம்.

உண்மை — புளொட்டை ஒழித்துக் கட்ட முயன்றிருக்கக் கூடாது தான்? — அதில் நியாயம் இல்லை என ஒத்துக் கொள்கிறேன்.

நாங்கள் என் ஆயுதங்களைத் திருப்பிக் கொடாமல் வைத்திருக்கிறோம் தெரியுமா? எல். ரி. ரி. ஈ. சமாதானத்தை நிராகரித்தால் அந்த இயக்கத்தை அழித்துக் கட்டுவதற்குத்தான் என்கிறது — புளொட் இந்தப் பேட்டியில்.

www.padippakam.com



செய்தி விநோதனும் நம்பவே முடியவில்லை. இந்த புளொட்கள் ஒரு காலத்தில் "அச்சம் என்பது மடமையடா — அஞ்சாமை திராவிடர் உடமையடா" எனும் பாட்டோடு தொடங்கி தங்களது "தமிழீழத்தின் குரல்" எனும் வானொலியை நடத்தினார்கள். சிங்கள மக்கள் வட கிழக்கில் எங்கு வேண்டுமானாலும் குடியேறலாம் — அவர்களைக் குடியேற்றலாம். என்றும் பேட்டி தொடருகிறது. இப்படித் திடீரெனப் போகும் துணிவு - செயல்படும் துணிவு புளொட் தலைவர்களுக்கு வந்திருக்கிறது. இலங்கை இராணுவம் ஒரு காலத்தில் கூறியது, நாங்கள் எதற்காக "புலி"களைத் தாக்குகிறோம் தெரியுமா? அப்போது தான் அவர்கள் சமாதான மேசைக்கு வருவார்கள் என்று. இறுதி வரை இதைச் செய்ய முடியவில்லை. தங்களை அழித்தொழித்ததாகச் சொல்லும் கால கட்டத்தில் — இரண்டு மூன்று வருடங்களுக்கு முன் — புளொட் இயக்கம் இலங்கை இராணுவத்தோடு கைகோர்த்திருந்தால் எவ்வளவு இலகுவில் சாதகமாய் வந்திருக்கும்! சந்தர்ப்பத்தை தவற விட்டு விட்டார்களே என்பது தான் கவலை.

வட — கிழக்கு இணைந்த மாகாண சபை இறுதி முடிவாக கிடைத்துவிட்டதாகச் சொல்ல முடியாது. சர்வஜன வாக்கெடுப்பின் மூலம் தான் இது உறுதிப்படுத்தப்படும். ஆனால் இலங்கையை இணைந்த ஒரு மாகாணசபைக்கு இழுத்துவரச் செய்ததும் — ராஜீவைக் கூட அவரது நிலையிலிருந்து மாற வைத்ததும் யாருடைய தளராத உறுதி? போராட்டக் காலத்தில் ஒரு இராணுவ முகாமுக்கு எதிராகக் கூட துப்பாக்கி ஏந்தாத புளொட் இவ்விதம் இன்று செயற்படுவது பச்சை சந்தர்ப்பவாதமில்லையா? என்ற கேள்வியை செய்தி விநோதன் எழுப்பாமல் இருக்க முடியவில்லை.

## தமிழீழ விடுதலைப் புலிகளால் ஒப்படைக்கப்பட்ட ஆயுதங்களில் ஒருபகுதி:



www.padippakam.com



# தமிழீழமே

## எமது குறைந்தபட்சக் கோரிக்கை.

-பாஸ்கரன்-

சர்வதேச அரங்கில் தமிழீழ விடுதலைப்போராட்டமானது இன்று முக்கியமான பிரச்சனைகளில் ஒன்றாகக்கருதப்படுகின்றது. எமது போராட்ட வடிவம் உச்சக்கட்டத்தையடையும்போது எமக்கு எதிராக திரைமறைவிலே செயற்பட்டசக்திகள் தற்போது பகிரங்கமாகச் செயற்படத் தொடங்கியுள்ளன.

இன்று தமிழர்களின் பிரச்சனைகள் சுமுகமாகத்தீர்க்கப்பட்டுவிட்டதாக பிரச்சாரங்கள் மேற்கொள்ளப்படுகின்றன. இலங்கையிலிருந்து வெளிவரும் பத்திரிகைகள்சரி, பெரும்பாலான இந்தியசஞ்சிகைகளும் சரி பிரச்சனைகள் தீர்ந்துவிட்டன என்றும எழுதுகின்றன. இருநாடுகளின் தலைவர்களும்( ஜே. ஆர். ராஜீவ்) வாழ்த்துத் தந்திகள் பறந்த வண்ணமேஉள்ளன. இடையிலே இவ்விரு நாடுகளின் தலைவர்களின் பெயர்களை இந்த ஆண்டு சமாதானத்திற்குரிய நோபல் பரிசு பெறுவதற்கு தகுதியானவை என்றும கூட எழுதுகின்றன.

இந்தநிலையில் ஸ்ரீலங்கா, இந்தியா ஆகிய இருநாடுகளுக்குமிடையே மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்தம் உண்மையில் தமிழர்களுக்கு ஒரு சமாதானத்தீர்வா? தமிழ்மக்கள சிங்களப்பேரினவாத அரசிடமிருந்து அடிப்படை உரிமைகளைப்பெற்றுக்கொண்டு விட்டனரா? என்பதை ஒவ்வொரு தமிழீழத்தின்குடிமகனும் சிந்திக்க வேண்டும்.

இவ்வொப்பந்த அடிப்படையில் 72 மணித்தியாலத்தில் ஆயுதஒப்படைப்பு என்றெல்லாம் மணித்தியாலக்கணக்கில் பேசிய அரசுகள் போராளிகள் ஆயுதம் ஒப்படைத்தபின்னர் நடந்தது என்ன? நடந்துகொண்டிருப்பதும்தான் என்ன? வாக்குறுதிகள் காற்றிலே பறக்கவிடப்பட்டன.

படிப்பகம்

www.padippakam.com



ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இத்தனைநாட்கள்
ஓடிவிட்டன தமிழ்மக்களுக்கு கிடைத்ததுதான்என்ன? தமிழ்ப்பிர
தேசங்களில் அரசபடையின் பாதுகாப்புடன் வேகமாக நடந்
துவரும் சிங்களக்குடியேற்றம், யாழ் மற்றும் பிரதேசங்களில்-
பாதிக்கப்பட்ட வைத்தியசாலைகள், சாலைகள் மற்றும் எத்த
னையோ புனருத்தாரண வேலைகள் இருக்கும்போது, பொலி
ஸ்நிலையங்கள் புனரமைக்கப்பட்டு சிங்கள நிர்வாகம் பழைய
படி புகுத்தப்படுகின்றது. தமிழ் மாநிலப்பொலிசார் எங்கே?
விடுதலைப்புலிகள் இயக்கத்திடமிருந்து ஆயுதங்களைப்பெற்றுக்-
கொண்ட இந்தியஅரசு ஏனையஇயக்கத்தினரை ஆயுதத்துடன்நட
மாட அனுமதிக்கிறது இதன் தாற்பரியம் என்ன? ஈழத்தமிழர்

சிங்கள அரசுடன் 1920ம் ஆண்டிலிருந்து ஒப்பந்தங்கள் செய்
தவண்ணம்தான் உள்ளனர். ஒப்பந்தங்கள் நடைமுறைப்படுத்தப்ப
ட்டனவா? ஆரவாரங்களுடன் செய்யப்படுகின்ற ஒப்பந்தங்கள்
சத்தமின்றிக் கிழித்தெறியப்படுகின்றது. ஒப்பந்தம் செய்யவரி
ந்து புறப்படும் தமிழ்த்தலைவர்கள் எம்மைஏமாற்றி விட்டார்
கள் என்று கூறுவதையும் பின்னர் பதவிக்காக அரசுடன் ஒட்டு
வதையும் தமிழினக்காட்டிக்கொடுப்புக்குக் கைகொடுப்பதையு
ம் பரம்பரை பரம்பரையாகத்தொடரும் துரோகங்கள் தமி
ழனைக்கொண்டே, தமிழனை அழிக்கும் கதைகள் இன்றுவரை -
தொடர்கின்றன. 1972ல் ஸ்ரீலங்கா குடியரசுக்கான புதிய-
அரசியல் அமைப்பு நிறைவேற்றப்பட்டபோது தமிழனுடையமிஞ்
சியிருந்த அற்ப சொற்ப சலுகைகளும் குழிதோண்டிப் புதைக்
கப்பட்டன.

இந்த அரசியல் அமைப்பை துரோகிகளான முன்னை
ள் யாழ். மேயர் அல்பிரட் துரையப்பா, ... மந்திரி செல்
லையா குமாரசூரியர் போன்றவர்கள் ஆதரித்தனர் இவர்களை
முன்னுதாரணம் காட்டி சிங்கள அரசு தமிழர்களும் இவ் அரசி
யல் அமைப்பை ஏற்றுக்கொண்டுள்ளனர் என்பதனை வெளியுலகு
க்கு காட்டிப் பிரச்சாரம் செய்ததை தமிழ்மக்கள் மறந்து-
போயிருக்கமாட்டார்கள். அற்பசலுகைகளுக்காகவும் பதவிக
ளுக்காகவும் தமிழினம் அடைமானம் வைக்கப்பட்டது என்பதை-
னை காலம் கடந்துதான் தமிழினம் உணர்ந்துள்ளது.

எமது மக்களின் விடிவிற்கானபோராட்டம் பல்வே
றுபட்டவெளிநாட்டுசக்திகளால் ,ஸ்ரீலங்காஅரசின் விண்ணப்பத
திற்கேற்ப இஸ்ரவேல், அமெரிக்கா, தெ. ஆபிரிக்கா, பாகிஸ்-
தான் ஆகிய நாடுகளின் உதவியுடன் நசுக்க முற்பட்டதை நா
மறிவோம். அந்தச்சக்திகளின் உதவியுடன் நமது போராட்டத

www.padippakam.com


தை நசுக்க முடியாமல் போகவே, இந்திய உதவியை இலங்கை அரசு நாடியது. இத்தருணத்தை எதிர்பார்த்திருந்த இந்தியா தனது சொந்த இலாபம் கருதி இலங்கைக்குள் புகுந்தது. இந்தியாவின் எண்ணத்திற்கு சில இயக்கங்கள் வேறு துணைபோயின. இதனாலேயே இயக்க மோதல்கள் உருவாகின. இவ் இயக்க மோதல்களில் அன்னிய சக்திகள் பெரும் பங்குவகிப்பதைத் தமிழ மக்கள நன்கு உணரவேண்டும்.

தமிழ் விடுதலைப்புலிகள் இயக்கமானது, அதன் கடந்த கால வரலாற்றையும் அதன் செயற்பாடுகளையும் நோக்குமிடத்து, தமிழீழ இலட்சியத்திற்குக் குறைவான எதையும் பெறும் நோக்கத்தைக் கொண்டிராது, பெரும் வெளிச்சக்திகளின் செயற்பாடுகளுக்கு இணங்கித்தனை மாற்றிக்கொள்ளாது சுதந்திர தமிழீழ இலட்சியத்தை அடைவதற்காகவே போராடி-வந்துள்ளது. இந்திய அரசின் பிடியிலிருந்து தம்மை விடுவித்துக்கொள்வதற்காகவும் பல்வேறுபட்ட நடவடிக்கைகளை எடுத்து வந்தது. இந்திய அரசின் கைக்கூலிகளாகச் செயற்படும் இயக்கங்கள்-உண்மையில் தமிழீழ விடுதலைக்கு எந்தவகையிலும் ஆதரவானதல்ல என்பதை நாம் அறிந்துகொள்ளவேண்டும். அதேவேளை இந்த ஒப்பந்தமும் தமிழ் மக்களுக்கு எந்தவகையிலும் உதவப்போவதில்லை என்பதை இனிமேலாவது அறிந்துகொள்ளவேண்டும்.

துரோகங்கள் மீண்டும் தொடர்கின்றன. தமிழர் விடுதலைக்கூட்டணி, திரீஸ்டார் ஆகியவற்றின் தலைமைப்பீடங்கள் இவ் ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டன. தமிழர்களுக்கு விடிவு தருவதாகச் சொல்லிக்கொண்டு இவர்கள் பதவிக்கு விலைபோனார்கள். தமிழர்கள் கொலைசெய்யப்பட்டபோது மௌனம்சாதித்தவர்கள், ராஜீவ் தாக்கப்பட்டபோது சென்னையில் உள்ள இலங்கைத் தூதுவராலயத்தின் முன் குழுமி அதைத்தாக்க முற்பட்டது இவர்களின்-அடிமைமனப்பான்மைக்கு அதிசிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டபின் ராஜீவ்காந்தி - பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் தனது இராணுவம் முழுக்க முழுக்க ஜே.ஆரின் விருப்பத்தைப் பூர்த்தி செய்யவே, அவரின்விருப்பத்தின் பேரிலேயே அங்கு செயற்படும் என்றும் கூறியுள்ளார். இன்று ஸ்ரீலங்கா அரசாங்கத்திற்கும், இந்திய ஏகாதிபத்தியத்திற்கும் எதிராக எமது போராட்டம் எடுத்துச்செல்லப்படவேண்டியுள்ளது. ஒவ்வொரு தமிழ் மகனும் விடுதலைப்புலிகளின் கரங்களைப் பலப்படுத்தவேண்டிய காலகட்டமிது.

படிப்பகம்

www.padippakam.com



# புதினத்தாள் துணுக்குகள்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் பிராந்தியக் காரியாலயம் கல்முனையில் திறந்துவைக்கப் பட்டது. கல்முனை பிரதம பௌத்தபிக்கு வண. சோம ரத்னதேரோ புலிக்கொடியை ஏற்றிவைத்தார். முன்னாள் கல்முனை பட்டினசபைத் தலைவர் ஹாஜி கே. கே. மரக்காயர் நாடா வெட்டி காரியாலயத்தை திறந்துவைத்தார். மேற்படி விழா தமிழீழ விடுதலைப்புலிகளின் கல்முனை அமைப்பாளர் ரமணன் தலைமையில நடைபெற்றது.

வடபகுதிக்கான முதலாவது புகையிரதம் புலிக்கொடியுடன் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தது. சற்றடே ரிவியூ ஆசிரியர் காமினி நவரட்ண புகையிரத சாரதியான தமிழரை மாலையிட்டு வரவேற்றார்.

இந்தியா இலங்கையின் வான் பரப்பில் பறந்து உணவுப்பண்டங்களை வீசியதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை இதன் காரணமாகவே நான் ராஜீவ்காந்தி இலங்கைக்கு வந்திருந்தபோது அவரைவரவேற்க விரும்பாது பகிஷ்கரித்தேன் இதன்காரணமாகவே தான் அந்த வைபவத்தில் கலந்துகொள்ளவில்லை என சிங்களப்பிரதமர் ரணசிங்க பிரேமதாச தெரிவித்தார்.

மன்னார், வவுனியா பகுதிகளில் ஆயுதமுனையில் கொள்ளையில் ஈடுபட்டிருந்த ஏழு புளொட் உறுப்பினர்கள் இந்திய இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டனர். இவர்களைக் கைது செய்த இந்திய இராணுவத்தினர் ஏன் நீங்கள் உங்களுடைய ஆயுதங்களை கையளிக்கவில்லை என்று கேட்டபோது தமது தலைவரின் உத்தரவு இதுவரை கிடைக்கவில்லை என்று குறிப்பிட்டனர். பின் இவர்களது ஆயுதங்களைப் பறிமுதல் செய்து விடுதலை செய்தனர்.

www.padippakam.com



# அணிதிரள்வோம்

## தமிழீழ விடுதலைப் புலிகளின் வழியிலே..

—எஸ்.ஸ்ரீ.அருள்—



1958ல், 1977ல், 1983ல் நடந்த
கொலையை எப்படி மறந்திடுவோம் நாம் ?
கடந்த காலத்தில் சிங்கள இனவெறியரால்
அழிந்த தமிழ் மக்களை எப்படி மறந்திடுவோம்?
தம் படை பலம் குறைந்து-
எம் புலிகளின் பலம் கண்டு-
அஞ்சி சதிவலையில் வீழ்த்தமுயல்கின்றனரா ?
கொலைவெறியர்கள் கொன்று குவித்தபோது-
எமக்கு துணைவந்தவர் யார் ?
ஒற்றைத் துப்பாக்கியுடன் சுற்றிநிற்கும் கூலிப்
படையை சுட்டுவீழ்த்த துணிவுடன் புறப்பட்ட
வீர மறவன் பிரபா.
அவர் கொள்கைக்கு துணைநின்றவர்களும்
இன்று உலகின் வரலாற்றில் தமிழர்களின்
புகழ் பரப்பும் சரித்திர நாயகர்கள்
தமிழீழ மண்ணில் இரத்தவெள்ளம் ஓடியபோது-

www.padippakam.com



ஸ்ரீலங்கா அரசின் கொடுமையை தடுத்து
நிறுத்த எவரும் முன்வரவில்லை இன்று
புலிகளின் புகழ் உலகெங்கும் பரவியதைக்
கண்டு கலங்கிய ஸ்ரீலங்கா அரசு
இந்தியாவை துணைகொண்டு புலிகளை அழிக்க
வழிசமைத்த போலி ஒப்பந்தத்தை
கைச்சாத்திட்டு தற்காலிகமாக போர் ஓய்வு
பெற்றனர் எத்தனை நாட்களுக்கு
இவர்களின் இந்த கபட நாடகம் ?
கிழக்கு மாகாணத்தில் நடக்கும் சதிகள்
எத்தனை..? அதில் பகடைக் காயாய்
உருட்டப்படும் தமிழ்த் துரோகிகள் எத்தனை ?
இத்தனை தடைகளைத் தாண்டி
என்றோ ஓர்நாள் புலிகள் தமிழீழம்
அமைப்பது திண்ணம் அப் பாதையை
நாம் தொடர்வோம் சிங்கள வெறியர்களுக்கு
துணைநிற்கும் சதியர்களை அழித்து
இழந்த எம்மண்ணை மீட்டிட-
அணிதிரள்வோம் புலிகளின் வழிகளில்.


தமிழீழ விடுதலைப் புலிகளின் குரல்

07 - 84 02 25


07 - 40 21 54

இரவு 11.00 - பி.ப. 5.00 மணிவரை

07 - 21 25 42

www.padippakam.com





# இந்த ரோஜாக்கள் உதிர்வதில்லை....!

அன்று திங்கட்கிழமை பாட-சாலை நாள் என்றபடியாலு-ம் தான் டென்மார்க்கிற்கு-வந்து ஒரு வருடம் என்ற -படியாலும் அவன் தன் வீட்டு நினைவிலேயே எழும்ப முயற்சிக்கும்போது பக்கத்துக் கட்டிலிலிருந்த அவன் நண்பன்-ரவி இப்பத்தானே ஐந்துமணி இன்னம் ஆறுமணிக்கு ஒரு மணித்தியாலம் கிடக்கு பேசாம-ல் கிட என்று சொல்லிக்-கொண்டே படுத்தான்.

ரவி சொன்னது கேட்டதோ? இல்லையோ? சுரேசின் நினைவுச்சக்கரம் அவன் வீட்டுக்கு உருண்டோடியது.. மாமா..மாமா..என்று -தோளில் பாயும் அக்காவின் குழந்தைகள், வீட்டுக்குத்தெரியாமல் படம்பார்க்கப் -போன இரவு வேளைகளிலும் கூட பயமின்றி நடமாடிய -அந்தச் சோலைவனம் இன்று நினைக்கும் போதே மனம்-



அறிமுக எழுத்தாளர் பி.நவம்

www.padippakam.com




படபடத்தது. அவன் கடைசியாக இருந்த சில மாதங்களில் அனுபவித்தவைதான் எத்தனை...?

அன்று பிற்பகல் அந்த ஊரை இராணுவம் சுற்றிவளைத்துக்கொண்டது. எப்படித் தப்பிப்பதென்றே அந்த ஊர் இளைஞர்கள் அல்லோலகல்லோலப்பட்டனர். ஹெலிகொப்டர் சத்தம் அடிவயிற்றைக் கலக்கியது. அறைஜன்னலூடாகப் பார்த்தபோது தூரத்தில் வேலி பிரிக்கும் சத்தம் கேட்டுத் திடுக்கிட்டான். சுமார் ஐந்து, ஆறு ஆமிக்காரர்கள் அந்த ஊர் இளைஞர்களைப் பருந்து கவ்விக் கொண்டு வரும் கோழிக்குஞ்சுகள் போல இழுத்து வந்தார்கள்.

இதைப்பார்த்த அவனுடைய தாய் தகப்பன் சகோதரி பிள்ளைகள் எல்லோரும் பலி கொடுக்க ஆட்டுக்கடா வைத்திருப்பவர்கள் போல காத்திருந்தார்கள். இராணுவம் அவன் வீட்டுக்குக கிட்ட நெருங்குகையில் அறைக்கட்டிலுக்குக் கீழ் மறைந்துகொண்டான்.

அவன் தந்தைக்கு சிங்களம் தெரியும் என்றபடியால் ஏதோ சொல்லிச் சமாளித்துவிட்டார், ஆனால் அவர்கள் போய்விட்டார்களென்று வெளியே வந்தபோதுதான் அடுத்த பக்கத்தால் வந்த ஒரு இராணுவக் குரூப் சுரேசை கொத்திக்கொண்டு சென்றது. பின் முகமூடித்தலைக்கு முன்னால் அவனுடைய ஊர் இளைஞர்கள் பலர் நிறுத்தப்பட்டனர்:



www.padippakam.com



எதிர்பாராதவகையில் முகமூடி ஒன்று சுரேசைப் பார்த்து ஆமென்று தலையாட்டிவிட்டது.

விசாரணை முடிந்து அந்த இளைஞர்கள் சிலரை இயமன் பாசக்கயிற்றால் பிடிப்பதுபோல பிடித்து தங்கள் எருமை மாட்டு டிரக் வண்டியில் அரிசு, மா மூடைகள் ஏற்றுவதுபோல அடுக்கினார்கள்.

ஏற்றிச் சென்றவர்கள் ஒவ்வொரு காம்பாக ஆறுமாதகாலமாக உயிர் இருக்க உயிர் எடுத்தார்கள். ஆனாலும் அங்கே இருந்த சில உயிர்கள் நாளுக்குநாள் முடிக்கப்பட்டு வருவது அவனுக்குத்தெரியாததல்ல. அங்கே உயிர்களின் வருகை கூடியதால் சுரேசை இயமலோகத்திலிருந்து மண்ணுலகிற்கு ஒருவாறாக அனுப்பிவைத்தார்கள். அங்கே அவனுக்கு பற்பல நோய்கள் வந்தது. அப்படியிருந்தபோதும் அவன் தமிழீழவிடுதலைப் புலிகளுக்கு தன்னலான உதவிகளை செய்துகொண்டு வந்தான்.

கடைசியில் ரவி தன்வீட்டுநிலமையை மனதில் கொண்டு தன்னால் தொடர்ந்து அங்கு வாழ்வதற்கேற்ற உடல்நிலை இடம் கொடாமையாலும் அவன் வெளிநாடு புறப்பட முடிவெடுத்தான்.

"சுரேஸ் எழும்படா நேரம் ஆறு மணியாகிறது!" என்று பக்கத்துக் கட்டிலில் இருந்த ரவி சுரேசின் நினைவுச் சக்கரத்தை அறுத்தான் சுரேஸ். இன்டைக்குத் திங்கட்கிழமை அனேகமாக வீட்டிலேயிருந்து கடிதம் வரும் என்று சொல்லிக் கொண்டு காலைக்கடன் முடிப்பதற்காக மல சல கூடத்தை நோக்கி நடந்தான்.

நேரம் எட்டுமணியை நெருங்கிக்கொண்டிருந்தது, சுரேசும், ரவியும் அவசர அவசரமாக சமைத்துக்கொண்டிருந்தனர். சுரேஸ் உனக்குக் கடிதம் வந்தருக்கு என்றுகுரல் கொடுத்துக்கொண்டு வந்தான் சண். சுரேஸ் வீட்டுக்கடித்தை கனகாலம் காணாத காரணத்தால ஆவலோடு பிரித்தான். உள்ளே கடிதத்துடன் ஒரு நினைவு அஞ்சலி நோட்டீஸ் இருந்தது. அதைப்பார்த்தவுடன் சுரேசிற்கு தலைசுற்றி மயக்கம் வருவது போலிருந்தது. என்னைப் போன்வருடம் இதே நேரம் பஸ் சேற்றி விட்ட இவனுக்காஇந்தக்கதி? எந்த நேரமும்கன்றுக்குட்டியைப்போல துள்ளித்திரிவானே? நீ போய்விடு உன் அப்பா அம்மாவை நான் பார்க்கிறேன் நீ முதலில் உன் வருத்தத்திற்கு மருந்தெடுத்து உன்னை நன்றாக தேற்றிக்கொள் என்று என்னுயிரை

படிப்பகம்

www.padippakam.com



பாதுகாத்தவன் இன்று தன்னுயிரைத் தியாகம் செய்துவிட்டானே? எப்போதும் புத்தகம் தூக்கும் அவன் கரங்கள் எப்பொழுது துப்பாக்கி தூக்கியதோ? அரும்பு மீசையும், அகன்ற மார்பும், தோள்மூட்டும் கொண்ட இவனுக்கா? இந்த வயதில் இப்படி ஒரு மரணம்? சுரேஸ் வருத்த மிகுதியால் அன்று முழுவதும் பாடசாலைக்கே போகவில்லை. தன் அறையிலே நடைப்பிணமாக இருந்தான்.


சுரேஸ் அறையில் சில நேரம் இரவில் ஆறு ஏழு பேர் வட்டமேசை மகாநாடு கூடுவது வழக்கம். அன்றும் வழமைபோல அது கூடியது. சுரேஸ் அதில் பங்குகொள்ள விரும்பாதவனாய் நித்திரைபோல படுத்தான். மகாநாட்டில உலக நாட்டிலுள்ள பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டு கடைசியில் டென்மார்க் தமிழர் நலன்புரி மன்றம் பற்றி விவாதம் தொடங்கியது.

உதை எப்ப ஆரம்பிச்சாங்களோ அன்டையிலை இருந்து காசு எடுத்து ஒரு கிழமைக்குள்ளை வந்துவிடுவாங்களென்று ஒரு பதினேழு வயதுடையவர் தனது கருத்தை வெளியிட்டார்.

திண்டது செமியாமல் உங்களமாதிரி ஆக்கள் இஞ்சை இருந்து விசர்க்கதையள் கதைச்சுக் காலம் கழியுங்கோ! ஈழத்திலை விடுதலைப்புலிகளும் மக்களும் இணைந்து நடத்துற போராட்டத்தை உங்களுக்கெல்லாம் புரியவைக்கிறதும் ஒரு போராட்டமாத்தானிருக்கும்' என்று முகத்திலடித்தால் போல் கூறிவிட்டு உள்ளே நடந்தான் சுரேஸ்.

உள்ளே சென்ற சுரேசின் மனதில் ஒரு நெருடல், மீண்டும் ஒருமுறை அந்த நினைவஞ்சலிப் படத்தைப் பார்த்துக்கொண்டான். தாயகத்திற்காக தங்களுடைய வாழ்வை உதிர்த்துக்கொண்ட இந்தமலருக்கு முன்னால் நாமெல்லாம் .........?

அவன் மனதிலிருந்த ஏக்கம் ஒரு பெருமூச்சாக வெளியேறியது.



www.padippakam.com

# புலிக்கொடி காத்த குமரன்.!

விடுதலைப்புலிகளின் தியாகங்களை விபரிக்க சங்கத் தமிழ்மொழியிலும் நமக்கு வார்த்தைகள் கிடைக்கவில்லை.

யாழ். மாவட்டத்தளபதி குமரப்பா, திருமலை மாவட்டத்தளபதி புலேந்திரன், இவர்களுடன் சயனைட் அருந்திய சக வீரவேங்கைகள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த, உயர்ந்த மரியாதைகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மணமாலை தரித்த மாதமொன்றும் ஆகவில்லை.!
காதல் மனையாளைப்பிரிந்து–
அன்பால் நிறைந்த ஈழத்தமிழ் மக்களைப் பிரிந்து–
தமிழீழ விடுதலையே ஒரேஇலட்சியமாகக் கருதி
வாழ்வை முடித்துக்கொண்ட தளபதி குமரப்பாவின்
தியாகத்திற்கு இணையாக உலகவரலாற்றிலிருந்து ஒரு
உதாரணத்தையேனும் எம்மால் தேடமுடியவில்லை.

மனிதகுல வரலாற்றில் இது ஒரு அசாதாரணமான நிகழ்ச்சி.

குமரப்பா நீ தமிழினத்தின் தன்மானம் காத்தவன்!
உன்னை ஈழத்தமிழினத்தின் கொடிகாத்த குமரன்என
அழைப்பதில் நாம் பெருமையடைகிறோம்.

படிப்பகம்

www.padippakam.com



# திலீபன் தியாகம்

படிப்பகம்